சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 28.09.2018

சாதாரணக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, ஹேவிளம்பி வருடம் புரட்டாசி மாதம் 12–ம் நாள் (செப்டம்பர் திங்கள் 28–ம் நாள்:–28.09.2018) வெள்ளிக் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

பொருள் எண்.1

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 23.08.2018ம் தேதிய ந.க.எண்.22866/2018/பி3 எண் செயல்முறைகளின்படி, 2018–19ம் ஆண்டிற்கான திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ரூ.14.40 இலட்சம் மதிப்பீட்டில் நுண்உரம் செயலாக்கம் மையங்களுக்கு குப்கைகளை சேகரம் செய்ய 8 எண்ணம் Battery Operated Vehicle வாங்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு 24.09.2018ம் அன்று வரப்பெற்ற 7 ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி வாய்ந்த கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தக்காரர்களின் விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | M/s பிரியம் இன்டஸ்ரீஸ், சென்னை | ரூ.1439200.00 |
| 2. | M/s அருண் இந்தியன் மோட்டார்ஸ், சேலம் | ரூ.1436000.00 |

அலுவலகக் குறிப்பு:– மேற்கண்ட வரப்பெற்ற **விலைப்புள்ளிகளை சரி பார்த்ததில், மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவாக ரூ.1436000/– (ரூபாய் பதினான்கு இலட்சத்து முப்பத்து ஆறாயிரம் மட்டும்) விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s அருண் இந்தியன் மோட்டார்ஸ், 5, காந்தி ரோடு, சேலம்–636007 அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கலாம். (ந.க.எண்.7867/2015/இ1)**

தீர்மான எண், நாள் **474, நாள்.28.09.2018**

தீர்மானம்

*******

## பொருள் எண்.2

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 31.07.2018ம் தேதிய ந.க.எண்.12981/2018/இ3 எண் செயல்முறைகளின்படி, 2018–19ம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ், பாதாள சாக்கடைத் திட்டம், குடிநீர் அபிவிருத்தித் திட்டம் மற்றும் இயற்கை சீற்றத்தின் காரணமாக பழுதடைந்த சாலைகளின் மேம்பாட்டுப் பணிக்கு ரூ.600.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு மூன்று சிப்பங்களாக 24.09.2018ம் அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**சிப்பம் எண்.1 – மதிப்பீடு ரூ.265.00 இலட்சம்**

1. திரு.த.தமிழ்ராஜன், ஒப்பந்தக்காரர் – 4.98 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் – 6.32 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்

**சிப்பம் எண்.2 – மதிப்பீடு ரூ.185.00 இலட்சம்**

1. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் – 4.90 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்
2. திரு.த.தமிழ்ராஜன், ஒப்பந்தக்காரர் – 5.37 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்

**சிப்பம் எண்.3 – மதிப்பீடு ரூ.150.00 இலட்சம்**

1. திரு.G.M.மணிகண்டன் @ சுப்பிரமணியன்,
   ஒப்பந்தக்காரர் – 4.99 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்
2. M/s A.P.கன்ஸ்ட்ரக்சன்ஸ்
   ஒப்பந்தக்காரர் –9.00 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2018–19ன் கீழ் மேற்கண்ட விவரப்படி 3 சிப்பங்களுக்கும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன்படி சிப்பம் எண்.1, 2 மற்றும் 3க்கு முறையே **4.98% , 4.90% மற்றும் 4.99% சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ளதால், மேற்படி ஒப்பந்தக்காரர்களிடம் பேரப் பேச்சு கடிதம் (Negotiation Letter) வழங்கக்கோரி 27.09.2018ல் கடிதம் அனுப்பியமைக்கு, சாலைப் பணிகளுக்கான மூலதனப் பொருட்கள் விலையுயர்வு மற்றும் தொழிலாளர் கூலி உயர்வு காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலையினை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார்கள். எனவே வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். (ந.க.எண்.2380/2018/இ1).** |
| தீர்மான எண், நாள் | 475, நாள்.28.09.2018 |
| தீர்மானம் | |

*******

பொருள் எண்.3

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 23.08.2018ம் தேதிய ந.க.எண்.22860/2018/பி3 எண் செயல்முறைகளின்படி, 2018–19ம் ஆண்டிற்கான திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நுண்உரம் செயலாக்கம் மையம் கட்டும் பணி– 2 எண்ணம் (5TPD & 2 TPD) ரூ.109.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு 24.09.2018ம் அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>1. வார்டு எண்.5, வாரச்சந்தை தெற்குப் பகுதியில் நுண்உரம் செயலாக்கம் மையம் கட்டும் பணி, மதிப்பீடு ரூ.68.00 இலட்சம்.</u>

1. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் – 4.95 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்
2. திரு.த.தமிழ்ராஜன், ஒப்பந்தக்காரர் – 5.31 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்

<u>2. வார்டு எண்.3, சாமிகுளம் பழைய உரக்கிடங்கில் நுண்உரம் செயலாக்கம் மையம் கட்டும் பணி, மதிப்பீடு ரூ.41.00 இலட்சம்.</u>

1. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் – 4.86 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்
2. திரு.த.தமிழ்ராஜன், ஒப்பந்தக்காரர் – 5.37 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்

அலுவலகக் குறிப்பு:– திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் கீழ் மேற்கண்ட விவரப்படி 2 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன்படி வரிசை எண்.1 மற்றும் 2க்கு முறையே 4.95% **மற்றும் 4.86% சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ளதால், மேற்படி ஒப்பந்தக்காரர்களிடம் பேரப் பேச்சு கடிதம் (Negotiation Letter) வழங்கக்கோரி 27.09.2018ல் கடிதம் அனுப்பியமைக்கு, கட்டிடப் பணிகளுக்கான மூலதனப் பொருட்கள் விலையுயர்வு மற்றும் தொழிலாளர் கூலி உயர்வு காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலையினை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார்கள். எனவே வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். (ந.க.எண்.7867/2015/இ1).**

**தீர்மான எண், நாள்** **476, நாள்.28.09.2018**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2018–2019ன் கீழ் ரூ.600.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டு பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–2019ன் கீழ் ரூ.68.00 இலட்சம் மதிப்பீட்டில் நுண்உரம் செயலாக்க மையம் கட்டும் பணிக்கு மாநில மற்றும் மாவட்ட அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரி செய்தி மலரில் 05.09.2018ம் அன்று பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூ.55087/– M/s Accord Advertising Agencies, Chennai அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.2380/2018/இ1)**

**தீர்மான எண், நாள்** **477, நாள்.28.09.2018**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.5**

சின்னமனூர் நகராட்சி 25.95 சதுர கி.மீ பரப்பளவுடன் 27 வார்டுகள் கொண்ட இரண்டாம் நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் மக்கள் தொகை 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 42305 ஆகும்.

மக்கள் தொகை கணக்கீட்டின் படி தேவைப்படும் குடிநீரின் அளவு 5.71 எம்.எல்.டி. ஆகும். தற்போது தலைமை குடிநீர் நிலையம் முல்லை பெரியாறு ஆற்றுப்படுகையில் தடுப்பணை அருகே அமைக்கப்பட்டுள்ளதால் தங்கு தடையின்றி நாள் ஒன்றுக்கு 5.00 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறப்பட்டு பொது மக்களுக்கு சராசரியாக நபர் ஒன்றுக்கு 118 லிட்டர் வீதம் ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நகராட்சி பகுதியில் விவசாய பகுதி அதிகம் உள்ளதால் குடிநீர் மாசு ஏற்படாமல் குடியிருப்பு பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு தரமான குடிநீர் விநியோகிக்கும் பொருட்டு புதியதாக குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தால் நகராட்சிக்கு கூடுதல் செலவினம் மற்றும் குடிநீர் மையஙகளை பராமரிப்பு மேற்கொள்வதிலும், Membrane மாற்றம் செய்யவும் உபகரணஙகள் மாற்றவும் அதிக அளவில் தொகை செலவிட வேண்டிய நிலை உள்ளது.

எனவே இதனை தவிர்க்கும் பொருட்டு சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண். 1 முதல் 27 வரை உள்ள 27 இடங்களில் தனியார் பஙகளிப்பு மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோக மையஙகள் அமைத்து குறைந்த விலையில் பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் வழங்க ஏதுவாக இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தனியார் பஙகளிப்பின் கீழ் (Public Private Partnership mode) பாதுகாக்கப்பட்ட குடிநீர் மையஙகள் ஏற்படுத்தவும், மேலும் மறைமலை நகர் மற்றும் செஙகல்பட்டு நகராட்சிகளில் இத்திட்டம் சோதனை முறையில் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக செயல்பட்டு வருவதால் இத்திட்டத்தினை இந்நகராட்சியில் செயல்படுத்த திட்டமிடப்பட்டு பொது மக்களுக்கு குறைந்த விலையில் மேற்படி குடிநீர் விநியோகம் செய்யவும், மேற்படி விற்பனை விலையில் நகராட்சிக்கும் ஒரு பஙகு பெற்று சிறு வருவாய் ஈட்டவும் தக்க வகையில் அப்பணியை செய்ய முறையான நிபந்தனைகளின் அடிப்படையில் ஆர்வம் உள்ள நிறுவனங்களை தேர்வு செய்ய உரிய விருப்ப கேட்பு (Expression of Interest) கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.3925/2018/இ1)**

**தீர்மான எண், நாள்** **478, நாள்.28.09.2018**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.6**

இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அரசாணை எண்.313, நிதி (படிகால்) துறை, நாள்.18.09.2018–இன்படி அகவிலைப்படி 7 சதவிகிதத்திலிருந்து 9 சதவீதமாக 01.07.2018 முதல் உயர்த்தப்பட்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.3955/2018/சி1)**

**தீர்மான எண், நாள்** **479, நாள்.28.09.2018**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.7**

இந்நகராட்சியில் 2017–2018ம் ஆண்டுக்கு சொத்துவரி 100 சதவிகிதம் வசூலிக்கப்பட்டுள்ளது. 2017–2018ம் ஆண்டு இந்நகராட்சி வருவாய் உதவியாளர்கள் அனைவரும் 100 சதவிகிதம் வசூல் செய்தமைக்கு (அரசு கட்டிடங்கள் நீங்கலாக) ஒரு மாத அடிப்படை ஊதியத்தை ஊக்கத் தொகையாக வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளார். அரசு ஆணை எண்.2196 (நிலை) 20.11.1951இல் நகராட்சி நிர்வாக மண்டல குடிநீர் வழங்கல் துறை ஆணையின் படி மேற்படி பணியாளர்களுக்கு ஒரு மாத ஊதியத்தை ஊக்கத் தொகையாக வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| 2017-2018 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ. எண். | வருவாய் உதவியாளர் பெயர் / பதவி | கேட்பு ரூ | 2017–2018 வசூல் ரூ | நிலுவை ரூ. | அரசு கட்டிடங்கள் | ஊக்கத் தொகை |
| 1. | ஆ.செல்வகுமரன், வ.உ., 1,2,3,4 | 2465147 | 2376645 | – | 88502 | 31300 |
| 2. | பா.குருவம்மாள், வ.உ 15,16,17,18,19,20,21 | 1517953 | 1484805 | – | 33148 | 32200 |
| 3. | ரெ.ரவி, வ.உ 9,12,22,26,27 | 2143917 | 2120108 | – | 23809 | 31300 |
| 4. | வெ.நாகராஜன், வ.உ 10,11,23,24,25 | 2844984 | 2830978 | – | 14006 | 35200 |
| 5. | வீ.ராதாகிருஷ்ணன்,(கூ.பொ,அ.உ) 5,6,7,8,13,14 | 1303342 | 1300372 | – | 2970 | 31700 |
| | | 10275343 | 10112908 | – | 162435 | 161700 |

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்கண்ட விவரப்படி ஊக்கத் தொகை ரூ.161700/– மட்டும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் ஒப்புதல் பெற்று வருவாய் உதவியாளர்களுக்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **480, நாள்.28.09.2018**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.8

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் **01.04.2018** முதல் சொத்துவரி சீராய்வு செய்வது தொடர்பாக குடியிருப்பு கட்டிடங்கள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு சொத்துவரி சுய மதிப்பீட்டு படிவம் மற்றும் கணக்கீட்டு படிவம் விநியோகம் செய்யும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **06.09.2019**ம் நாளன்று கீழ்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **ஒப்பந்தப்புள்ளி கோரியவரின் விவரம்** | **100 பிரதிகளுக்கு பேப்பர் ரேம் அச்சுக் கூலி உட்பட** |
|---|---|---|
| 1. | கமலி கம்ப்யூட்டர் பிரஸ்,<br>பத்திர ஆபீஸ் மேற்குப் பகுதி.<br>மார்க்கையன்கோட்டை ரோடு, சின்னமனூர் | ரூ.280/– |
| 2. | ஸ்ரீ அம்மன் ஆப்செட் பிரஸ்,<br>பழைய பாளையம் ரோடு, சின்னமனூர் | ரூ.310/– |

**அலுவலகக் குறிப்பு:–** **1.மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1–இல் காணும் கமலி கம்ப்யூட்டர் பிரஸ், சின்னமனூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**
**2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.3132/2018/அ1).**

**தீர்மான எண், நாள்** **481, நாள்.28.09.2018**
**தீர்மானம்**

*******

## பொருள் எண்.9

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் குப்பை அள்ள பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண்.TN60Z2921 டிராக்டரில் உள்ள பேட்டரி ஆயுட்காலம் முடிந்ததால் அதனை பயன்படுத்த முடியாத சூழலில் பொது சுகாதார பணியின் அவசியம் கருதி புதிய பேட்டரி வாங்கி பொருத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.**9500/–** க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்**
**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்.**
**(ந.க.எண்.4121/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்** **482, நாள்.28.09.2018**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.10**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.TN603761க்கு தகுதிச் சான்று புதுப்பிக்கும் பொருட்டு சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு இவ்வலுவலக ந.க.எண்.6096/2012/இ2, நாள்.31.08.2018 தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | சிவகாமி ஆட்டோ ஒர்க்ஸ் நிறுவனம் | ரூ.61500/– |
| 2. | நேஷனல் பாடி பில்டிங் ஒர்க்ஸ் | ரூ.62750/– |

**அலுவலகக் குறிப்பு:–** **வரிசை எண்.1–இல் காணும் நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6096/2012/இ2)**

**தீர்மான எண், நாள்** **483, நாள்.28.09.2018**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.11**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான பழைய பேருந்து நிலையத்தை இடித்து புதியதாக கட்டப்பட்டுள்ளது. மேற்படி பேருந்து நிலையத்தில் கிழக்கு பக்கம் உள்ள 200x16 நீளம் 200 அடி அகலம் 16 அடி அளவு கொண்ட காலியிடத்தில் இரு சக்கர வாகனங்கள் நிறுத்தும் மையம் (சைக்கிள் மற்றும் டூவீலர் ஸ்டாண்ட்) அமைத்துக் கொள்ள தரை வாடகை அடிப்படையில் ஆண்டுக் குத்தகை மூன்றாண்டுகளுக்கு வழங்கவும் இதற்கான இரு சக்கர வாகனம் நிறுத்தம் நாள் ஒன்றுக்கு ஒரு சைக்கிளுக்கு ரூ.5/–, ஒரு டூவீலர்க்கு ரூ.10/– கட்டணம் நிர்ணயம் செய்யவும் ஏல வைப்புத் தொகை ரூ.100000/– (ரூபாய் ஒரு இலட்சம்) மட்டும் நிர்ணயம் செய்து முன் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. அனுமதிக்கலாம்.**
**2. ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ள ஆகும் செலவினம் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.370/2017/அ2)**

**தீர்மான எண், நாள்** **484, நாள்.28.09.2018**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.12**

இந்நகராட்சியில் காலியாக உள்ள இரண்டு இளநிலை உதவியாளர் பணியிடத்தை பூர்த்தி செய்ய அரசாணை எண்.44, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்.11.03.2015ன்படி இரண்டு தினசரி நாளிதழில் 10.08.2018ம் அன்று விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ.23040/– தினகுரல் தினசரி நாளிதழ் மற்றும் தொகை ரூ.13500/– தமிழக நியூஸ் தினசரி நாளிதழ்க்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. அனுமதிக்கலாம். (ந.க.எண்.1795/2018/சி1)**
**தீர்மான எண், நாள்** **485, நாள்.28.09.2018**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.13**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் சேகரம் ஆகும் குப்பைகளை எடுத்துச் செல்ல பயன்படுத்தப்படும் டம்பர் பிளேசர் பின் (Dumper Placer Bins) 15 எண்ணம் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் மேற்கண்ட பின்களை மராமத்து பணிகள் மேற்கொள்ள 27.09.2018ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்ட விவரப்படி மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | எஸ்.இளவரசன்,<br>எழுமலை வெல்டிங் லேத் ஒர்க்ஸ், கூடலூர் | பெட்டி ஒன்றுக்கு ரூ.5850/– வீதம் 15x5850 | ரூ.87750.00 |
| 2. | ஸ்ரீ காமாட்சி லேத் மற்றும் வெல்டிங் ஒர்க்ஸ், கம்பம் | பெட்டி ஒன்றுக்கு ரூ.6200/– வீதம் 15x6200 | ரூ.93000.00 |

**அலுவலகக் குறிப்பு:–** **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த ஏழுமலை வெல்டிங் லேத் ஒர்க்ஸ், கூடலூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். (ந.க.எண்.3305/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்** **486, நாள்.28.09.2018**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.14**

சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சங்கிலியார் திடலில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியின் முன்புறம் உள்ள காலியிடம் 100 அடி நீளம் 10அடி அகலம் (10x10) பெருமாள் கோவில் தெரு, கணக்கு வேலாயி அம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி தென்புறம் உள்ள காலியிடம் (8x12) நீளம் 8 அடி, அகலம் 12 அடி, முத்தாலம்மன் கோவில் தெரு, அரசு மருத்துவமனை சுற்றுச்சுவர் மேற்கு பக்கம் தெருவிற்கு கிழக்கு பக்கம் உள்ள காலியிடத்தில் (8x12) நீளம் 8 அடி, அகலம் 12 அடி கொண்ட காலியிடத்தில் தரை கடை மாத வாடகை அடிப்படையில் அமைத்துக் கொள்ளவும், வைப்புத் தொகை ரூ.75000/– நிர்ணயம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. அனுமதிக்கலாம்.**
**2.தமிழ்நாடு மாநகராட்சிகளின் சட்டம் 1920–ன்படி பொது ஏலக்கட்டுப்பாட்டு விதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளலாம். (ந.க.எண்.6550/2015/அ2).**

**தீர்மான எண், நாள்** **487, நாள்.28.09.2018**

**தீர்மானம்**

*******